தினமலர்

# கைப்பற்றியது அதிமுக!

## திருச்சி மாநகராட்சி மேயரானார் ஜெயா

## திமுகவை விட 52,415 ஓட்டு அதிகம்

திருச்சி, அக். 22-

**கடந்த 3 முறையாக காங்கிரஸ் வசமிருந்த திருச்சி மாநகராட்சி மேயர் பதவியை அதிமுக கைப்பற்றியது. அதிமுக சார்பில் போட்டியிட்ட ஜெயா, திமுக வேட்பாளர் விஜயா ஜெயராஜைவிட 52 ஆயிரத்து 415 ஓட்டுகள் அதிகம் பெற்று வெற்றி பெற்றார். திமுக வேட்பாளரைத் தவிர 14 வேட்பாளர்களும் டெபாசிட் இழந்தனர்.**

திருச்சி மாநகராட்சி மேயர் பதவிக்கு அதிமுக சார்பில் ஜெயா, திமுக சார்பில் விஜயாஜெயராஜ், மதிமுக சார்பில் டாக்டர் ரொஹையா, தேமுதிக சார்பில் சித்ரா, காங்கிரஸ் சார்பில் விஜயா, பாஜ சார்பில் கிரிஜா, பாமக சார்பில் லீமா ரோஸ்லின் உட்பட 16 பேர் போட்டியிட்டனர்.

கடந்த 3 தேர்தல்களிலும் முன்னணி கட்சிகள் கூட்டணி அமைத்து தேர்தலை சந்தித்து வந்தன. இந்நிலையில் முதன்முறையாக மாநில கட்சிகள், தேசிய கட்சிகள் என தனித்தனியாக தேர்தலை சந்தித்த நிலையில் உள்ளாட்சி தேர்தல் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியிருந்தது.

திருச்சி மாநகராட்சி தேர்தலில் கடந்த 17ம் தேதி பதிவான ஓட்டுகள் நேற்று ஜமால் முகமது கல்லூரியில் எண்ணப்பட்டன. காலை 8 மணிக்கு மாநகராட்சி தேர்தல் அலுவலரும், கமிஷனருமான வீர ராகவ ராவ் தலைமையில் ஓட்டு எண்ணும் பணி தொடங்கியது.

மேயர் பதவிக்கு மொத்தம் 3 லட்சத்து 75 ஆயிரத்து 867 ஓட்டுகள் பதிவாகியிருந்தன. முதலில் தபால் ஓட்டுகள் எண்ணப்பட்டன. பதிவான 105 தபால் ஓட்டுகளில் அதிமுக வேட்பாளர் ஜெயா 14 ஓட்டுகளும், திமுக வேட்பாளர் விஜயா ஜெயராஜ் 50 ஓட்டுகளும், மதிமுக வேட்பாளர் ரொஹையா 23 ஓட்டுகளும், தேமுதிக வேட்பாளர் சித்ரா 13 ஓட்டுகளும் பெற்றனர்.

தொடர்ந்து ஓட்டு மிஷின்களில் பதிவான ஓட்டுகள் எண்ணும் பணி தொடங்கியது. முதல் சுற்றில் அதிமுக வேட்பாளர் ஜெயா 9356 ஓட்டுகள் பெற்று , திமுக வேட்பாளர் விஜயாஜெயராஜைவிட 4468 ஓட்டுகள் அதிகம் பெற்று முன்னிலை பெற்றார். தொடர்ந்து ஒவ்வொரு சுற்றிலும் ஜெயா முன்னிலை வகித்தார்.

ஓட்டு எண்ணிக்கை முடிவில் அதிமுக வேட்பாளர் 1 லட்சத்து 61 ஆயிரத்து 458 ஓட்டுகள் பெற்று தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட திமுக வேட்பாளர் விஜயா ஜெயராஜை விட 52 ஆயிரத்து 415 ஓட்டுகள் அதிகம் பெற்று வெற்றி பெற்றார்.

விஜயா ஜெயராஜ் 1 லட்சத்து 9 ஆயிரத்து 53 ஓட்டுகள் பெற்றார். மதிமுக வேட்பாளர் ரொஹையா 37 ஆயிரத்து 618 ஓட்டுகள் பெற்றார். தேமுதிக வேட்பாளர் சித்ரா 30 ஆயிரத்து 471 ஓட்டுகள் பெற்றார். காங்கிரஸ் வேட்பாளர் விஜயா 15 ஆயிரத்து 387 ஓட்டுகள் பெற்றார்.


பாஜ வேட்பாளர் கிரிஜா 10 ஆயிரத்து 375 ஓட்டுகள் பெற்றார். சுயேச்சை வேட்பாளர் பழனியம்மாள் 3526 ஓட்டுகளும், பாமக வேட்பாளர் லீமா ரோஸ்லின் 1314 ஓட்டுகளும், பகுஜன் சமாஜ் வேட்பாளர் சுகந்தி 1216 ஓட்டுகளும், சுயேச்சை வேட்பாளர் சின்ன நாகம்மா 1099 ஓட்டுகளும், விடுதலை சிறுத்தைகள் வேட்பாளர் மேரி சுஜா 1078 ஓட்டுகளும், புதிய தமிழகம் வேட்பாளர் நாகரத்தினம் 983 ஓட்டுகளும் பெற்றனர்.

ஐஜேகே வேட்பாளர் டாக்டர் லதா 945 ஓட்டுகள் பெற்றார். சுயேச்சை வேட்பாளர்கள் லட்சுமி 543 ஓட்டுகளும், அஇஜமக வேட்பாளர் யமுனா பாய் 485 ஓட்டுகளும், சுயேச்சை வேட்பாளர் ராதா 440 ஓட்டுகளும் பெற்றனர். திமுக வேட்பாளர் விஜயா ஜெயராஜை தவிர மற்ற 14 வேட்பாளர்களும் டெபாசிட் இழந்தனர்.

அதிமுக வேட்பாளர் ஜெயாவுக்கு வெற்றி பெற்ற தற்கான சான்றிதழை கமிஷ னர் வீர ராகவ ராவ் வழங்கி னார். நிகழ்ச்சியில் அமைச் சர் சிவபதி, எம்.எல்.ஏ. மனோகரன், ஜெயாவின் கணவர் ராஜேந்திரன் உட் பட பலர் கலந்து கொண் டனர்.





திருச்சி மாநகராட்சி அரியமங்கலம் கோட்டம் 24வது வார்டு எண்ணும்போது பிற கட்சி ஏஜெண்ட்கள் வரும்முன், அதிமுக கட்சி ஏஜெண்ட் முன்னிலையில் வாக்குஎண்ணிக்கை துவங்கியது. இதனால் திமுக, காங்கிரஸ், அதிமுகவினருக்கு இடையே கடும் வாக்கு வாதம் ஏற்பட்டது.

# வாக்கு எண்ணும் மையத்தில் தகராறு

திருச்சி, அக்.22: திருச்சி மாநகராட்சி தேர்தல் வாக்கு எண்ணும் மையத்தில் கட்சியினரிடையே தகராறு ஏற்பட்டது.

திருச்சி மாநகராட்சி, கவுன்சிலர்கள் தேர்தல் முடிவுகள் நேற்று காலை 8 மணிக்கு ஜமால் முகம்மது கல்லூரியில் தொடங்கியது. 24வது வார்டுக்குட்பட்ட மின்னணு வாக்குபதிவு இயந்திரங்களை எடுத்துவ ரப்பட்டு வேட்பாளர்களை அழைத்தபோது, அதிமுக வேட்பாளர் சீனிவாசன் வந்து அமர்ந்தார். மற்ற கட்சி வேட்பாளர்கள் வர தாமதமானதால் வாக்குபதிவு இயந் திரங்களின் சீல் அகற்றப்பட்டு வாக்கு எண்ணப்பட்டது.

அப்போது திமுக, காங், தேமுதிக வேட்பாளர்கள் வந்து உதவி கமிஷனரிடம் ஏன் நாங்கள் வருவதற்குள் எண்ணிக்கையை தொடங்கினீர்கள் என கேட்டனர். அப்போது அதிமுக வேட்பாளர் சீனிவாசன் மற்றும் கட்சி நிர்வாகிகள் அவர்களுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். இதில் லேசான தள்ளுமுள்ளு ஏற்பட்டது. இதையடுத்து அதிகாரிகள் சமரசம் செய்ததையடுத்து வாக்கு எண்ணிக்கை நடந்தது.

## 3ம் இடத்தில் மதிமுக

| | | | |
|---|---|---|---|
| 1. | ஜெயா | அதிமுக | 1,61,458 |
| 2. | விஜயா ஜெயராஜ் | திமுக | 1,09,043 |
| 3. | ரொகையா பீவி | மதிமுக | 37,618 |
| 4. | சித்ரா | தேமுதிக | 30,471 |
| 5. | விஜயா | காங்கிரஸ் | 15,387 |
| 6. | கிரிஜா | பாஜ | 10,375 |
| 7. | வீமா ரோஸ்லின் | பாமக | 1314 |
| 8. | மேரி சுஜா | விசி | 1078 |
| 9. | சுகந்தி | பிஎஸ்பி | 1216 |
| 10. | நாகரெத்தினம் | புதிய தமிழகம் | 983 |
| 11. | லதா | ஐஜேகே | 945 |
| 12. | யமுனா பாய் | இஜமக | 485 |
| 13. | பழனியம்மாள் | சுயேட்சை | 3526 |
| 14. | சின்னநாகம்மா | சுயேட்சை | 1099 |
| 15. | லெட்சுமி | சுயேட்சை | 543 |
| 16. | ராதா | சுயேட்சை | 440 |

# திருச்சி அதிமு

திருச்சி, அக் 22: திருச்சி மாநகராட்சி மேயர் பதவியை முதன்முறையாக அதிமுக கைப்பற்றியது. அதிமுக 42 வார்டுகளிலும், திமுக 16 வார்டுகளிலும் வெற்றி பெற்றுள்ளது.

திருச்சி மாநகராட்சி மேயர் மற்றும் 65 வார்டு கவுன்சிலர்களை தேர்வு செய்ய கடந்த 17ம் தேதி தேர்தல் நடந்தது. அதிமுக வேட்பாளர் ஜெயா, திமுக வேட்பாளர் விஜயா ஜெய ராஜ், மதிமுக வேட்பாளர் ரொகையா பீவி, தேமுதிக வேட்பாளர் சித்ரா, காங்கி ரஸ் வேட்பாளர் விஜயா, பாஜ வேட்பாளர் கிரிஜா, பாமக வேட்பாளர் வீமா ரோஸ்லின், விடுதலை சிறுத்தைகள் வேட்பாளர் மேரி சுஜா, பகுஜன் சமாஜ் கட்சி வேட்பாளர் சுகந்தி, புதிய தமிழகம் வேட்பாளர் நாகரெத்தினம், ஐஜேகே வேட்பாளர் லதா, இந்திய ஜனநாயக மக்கள் கட்சி வேட்பாளர் யமுனா பாய், சுயேச்சைகள் பழனியம் மாள், சின்னநாகம்மா, லெட்சுமி, ராதா ஆகிய 16 பேர் போட்டியிட்டனர்.

திருச்சி மாநகரில் உள்ள 65 வார்டுகளை சேர்ந்த 5,90460 வாக்காளர்களில் 3,75,866 பேர் வாக்களித் தனர். 158 பேர் தபால் மூலம் வாக்களித்தனர். இதில் பதிவான வாக்குகள் திருச்சி ஜமால் முகமது கல் லூரியில் நேற்று எண்ணப் பட்டது.

மேயர் தேர்தலில் பதிவான வாக்குகள் ஒரு அரங்கிலும், கவுன்சிலர் தேர்தலில் பதிவான வாக் குகள் 4 கோட்டங்களுக்கு தனித்தனியாக 4 அரங்கு களில் எண்ணப்பட்டது. முதலில் தபால் ஓட்டுக்கள்

பாரதீய ஜனதா வேட்பாளராக கிரிஜா உள்பட 16 வேட்பாளர்கள் போட்டியிட்டனர். மாநகராட்சி தேர்தலில் மேயர் பதவிக்கு பதிவான வாக்குகள் திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் நேற்று காலை எண்ணப்பட்டன.

இதற்காக அங்கு 36 மேஜைகள் போடப்பட்டு இருந்தன. மொத்தம் 21 சுற்றுகளாக வாக்குகள் எண்ணப்பட்டன. ஒவ்வொரு சுற்றாக வாக்குகளை எண்ணி முடிவுகள் அறிவிக்கப்பட்டபோதும் அ.தி.மு.க. வேட்பாளர் ஜெயாவே, தி.மு.க. வேட்பாளர் விஜயா ஜெயராஜை விட கூடுதலாக வாக்குகள் பெற்று முன்னிலையில் இருந்தார். இறுதியாக மாலை 6 மணி அளவில் மேயர் தேர்தல் முடிவு அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டது.

ஒவ்வொரு வேட்பாளரும் பெற்ற ஓட்டு விவரம் வருமாறு:-



திருச்சி மாநகராட்சி மேயர் தேர்தலில் வெற்றி பெற்ற அ.தி.மு.க.வேட்பாளர் ஜெயாவுக்கு தேர்தல் அதிகாரி வீரராகவராவ் சான்றிதழ் வழங்கிய போது எடுத்த படம். அமைச்சர் சிவபதி, மாநகர் மாவட்ட செயலாளர் மனோகரன் எம்.எல்.ஏ மற்றும் பலர் அருகில் உள்ளனர்.

மொத்த ஓட்டுக்கள் — 5,90,460
பதிவானவை — 3,75,981
ஜெயா (அ.தி.மு.க) — 1,61,458
விஜயா ஜெயராஜ் (தி.மு.க) — 1,09,043
டாக்டர் ரொகையா பீவி (ம.தி.மு.க) — 37,618
சித்ரா (தே.மு.தி.க) — 30,471
விஜயா (காங்கிரஸ்) — 15,387
கிரிஜா (பா.ஜ.க.) — 10,375
லதா (ஐ.ஜே.கே) — 945
லீமா ரோஸ்லின் (பா.ம.க) — 1314
மேரிகஜா (விடுதலை சிறுத்தைகள்) — 1078
நாகரத்தினம் (புதிய தமிழகம்) — 983
யமுனா பாய் (ஏ.ஐ.ஜே.கே) — 485
பழனியம்மாள் (சுயேச்சை) — 3,526
சுகந்தி (சுயேச்சை) — 1,216
சின்ன அழகம்மாள் (சுயேச்சை) — 1,099
லட்சுமி (சுயேச்சை) — 543
ராதா (சுயேச்சை) — 440

## சான்றிதழ்

அ.தி.மு.க வேட்பாளர் ஜெயா, தி.மு.க வேட்பாளர் விஜயா ஜெயராஜை விட 52 ஆயிரத்து 415 வாக்குகள் கூடுதலாக பெற்று உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

திருச்சி மாநகராட்சி மேயர் ஆக தேர்ந்தெடுக்கப்பட்ட ஜெயாவுக்கு தேர்தலில் வெற்றி பெற்றதற்கான சான்றிதழை ஆணையர் வீரராகவராவ் வழங்கினார். அப்போது தமிழக கால்நடை பராமரிப்பு துறை அமைச்சர் என்.ஆர். சிவபதி, மாநகர் மாவட்ட அ.தி.மு.க செயலாளர் மனோகரன் எம்.எல்.ஏ. ஆகியோர் உடன் இருந்தனர்.

## கட்சிகள் பிடித்த இடங்கள்

திருச்சி மாநகராட்சியில் மொத்த வார்டுகள் 65 உள்ளன. இதில் ஒவ்வொரு கட்சியும் பிடித்த இடங்கள் விவரம் வருமாறு:-

அ.தி.மு.க–42
தி.மு.க– 16
ம.தி.மு.க – 3
காங்கிரஸ்–1
தே.மு.தி.க–1
சுயேச்சைகள் –2.

# முதல்-அமைச்சர் ஜெயலலிதாவின் மக்கள் நலத்திட்டங்களால் வெற்றி பெற்றேன்